RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s57

OPEN ACCESS

# திராவிட இயக்க உரையாசிரியர் பார்வையில் திருக்குறள்

## மு. சதீஸ்குமார் [அ, *]

[அ] தமிழ்த்துறை, சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு-638004, தமிழ்நாடு, இந்தியா.

# Thirukkural from the point of view of the commentator of the Dravidian movement

## M. Satheeshkumar [a, *]

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode-638004, Tamil Nadu, India

* Corresponding Author: satheeshkumarthamizh@gmail.com

Received: 12-08-2021
Revised: 15-04-2022
Accepted: 23-04-2022
Published: 29-05-2022

Check for updates

**ABSTRACT**

The Dravidian movement was created to uplift the downtrodden. Dravidian directors have also sought to see Valluvar as an atheist. The titles given by the Dravidian director in his speech in Thirukural are astonishing. It is located to attract attention that stimulates the reader to read. In it, with the speech of the old narrator Parimalagar, the Dravidian movement's proud Periyar, Kulanthai Puluvar, Bharathidasan, and Dr. kalaignar. The study sets out to reveal the artist's texts. It is better to accept the Dravidian director's textual texts for practical use as they contain ideas that can improve the society.

**Keywords:** Society, Rationalism, Religion, Dravidian Movement Thought

## முன்னுரை

தமிழ் மண்ணில் பிறந்து தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு வாழ்கின்ற வாழ்க்கையே மனித வாழ்க்கையின் தனிச்சிறப்பு ஆகும் என்று கருதுவதுதான் தமிழனுக்கு இருக்கவேண்டிய உயர்ந்த பண்பாகும். ஏ,மனிதனே! என்று இந்தச் சமுதாயத்தைப் பார்த்து அறநெறிகளால் வள்ளுவர் சாடும் பக்குவத்தை வேறு யார் சொல்ல முடியும்? மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்பதை அறிவுறுத்தும் வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறள் பாங்கே தனி.

"திராவிட நாட்டுளிர் உங்கள் செயற்கெலாம்

அறமே அடிப்படை ஆதல் வேண்டும்

அறம் எனல் வள்ளுவர் அருளிய திருக்குறள்" - பாவேந்தர் பாரதிதாசன்.

திராவிட இயக்கத்தினர் தமிழ் இலக்கியங்களில் மிக உயர்வானதாகப் போற்றிய நூல் திருக்குறள். அவ்வாறு அவர்கள் திருக்குறளைக் கைக்கொண்டதன் வெளிப்பாடுகளில் ஒன்று திருக்குறளுக்கு உரை செய்தல் என்பது. பரிமேலழகர் உரைக்கு எதிராக தோன்றியவையே திராவிட இயக்க உரைகளாகும். வள்ளுவர் குறள் பொதுமையானது. எனவே அதில் சமயமும் பகுத்தறிவுக் கருத்துக்களும் இருக்கும். சமயம் சார்ந்து வரும் குறள்களுக்கு திராவிட இயக்கத்தார் கூறும் உரைகளும் பகுத்தறிவுக் கருத்துகளுக்கு பரிமேலழகர் கூறும் கருத்துக்களும் இங்கு ஆராயப்பட்டுள்ளன.

## திருக்குறள் - திராவிட இயக்க உரைகள்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க நிலையில் திராவிட இயக்கங்கள், பகுத்தறிவு இயக்கங்கள், புதிய நோக்கில், புதிய பார்வையில், புதிய கோணத்தில் தமிழ் இலக்கியங்களை காண முற்பட்டனர். பிற இலக்கியங்களைக் காட்டிலும் திருக்குறளுக்கு உரைகள் மிகுதியான அளவில் அமைந்ததற்குக் காரணம் திருக்குறள் இலக்கிய வடிவில் அமைந்திருப்பதே ஆகும்.

"திருவள்ளுவர் இந்தச் சமுதாயத்தின் அடிப்படை நெருக்க உறவின் மீதான தம்முடைய அறிவுக் கருவூலத்தைச் செம்மையுடன் தெளிவாக நிறுவியுள்ளார். வள்ளுவரின் ஒவ்வொரு சிந்தனையும் பளிங்குபோலத் தமிழ்ப்பண்பாடு, மரபு, குறிக்கோள்களை எடுத்துக்காட்டும் தனிச்சிறப்புடன் விளங்கி வருகிறது" என்கிறார் முனைவர் சி.அங்கயற்கண்ணி (Kamalakkannan, 2016).

திராவிட இயக்கச் சிந்தனைகளோடு திருக்குறளை இணைத்துப் பார்த்தவர்களில் முதன்மையானவர் பெரியார். உரையென்று தனியாக நூல் எதுவும் பெரியார் எழுதாவிட்டாலும் திருக்குறள் குறித்து நிறைய சொற்பொழிவுகள் செய்திருக்கிறார் குடியரசு இதழில் கட்டுரையும் எழுதி இருக்கிறார். திராவிட இயக்கச் சிந்தனைகளோடு உரைகள் பெருகக் காரணம் பெரியார் அவர்களின் தூண்டுதலில்தான் என்றால் மிகையன்று. திருக்குறள் உரை கண்டு ஆற்றலின் பயன்பாட்டிற்கு அரண் செய்தவர்களுள் அனைவராலும் போற்றப்பட்டவர் பரிமேலழகர் ஆவார். திராவிட இயக்க நோக்கில் முதன் முதலில் உரை கண்டவர் புலவர் குழந்தை அதனால் அவர் விளக்குகின்ற விளக்கங்களையே பலரும் வழிமொழிந்துள்ளனர் எனலாம் எனினும் சிற்சில வேறுபாடுகளையும் காண முடியும்.

## திருக்குறள் - திராவிட உரைப்போக்கு

திருக்குறளுக்கு திராவிட நோக்கில் எழுதப்பட்டுள்ள உரைகள் பரிமேலழகரின் உரைக்கருத்துக்களை மறுத்து, சமூகத்தை மேம்படுத்தும் பகுத்தறிவுக் கருத்துக்களை உணர்த்தும் வகையில் தோன்றலாயின. அதிகாரத் தலைப்புகளை அமைப்பதிலும் அதிகாரங்களையே மாற்றி அமைப்பதிலும் குறள் வைப்பு முறையிலும் சில மாற்றங்களைத் திராவிட இயக்க உரைகளில் அறிய முடிகிறது. புலவர் குழந்தை 'இறை நலம்' என்று முதலதிகாரத்திற்கும் பெயர்மாற்றம் செய்தார் .பாரதிதாசன் 'உலகின் தோற்றம்' என்று பெயர் சூட்டுகிறார். மேலும், இறை வாழ்த்து, உயர்ந்தோர் சிறப்பு, வழிபாடு, அறிவின் சிறப்பு, இறைமைப் பண்புகள் எனப் பல தலைப்புகளைக் கொண்டு கடவுள் வாழ்த்து அதிகாரம் திராவிட இயக்கத்தாரால் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

"தங்கள் கருத்துக்கு ஏற்ப அதிகாரத் தலைப்புகளுக்கும் பொருள் மாற்றங்களைக் கொண்டு கண்டுள்ள திராவிட இயக்க உரையாசிரியர்கள் அனைவரும் முதல் அதிகாரத்தலைப்பைத் தவிர பிற அதிகாரங்களின் பெயர்களை மற்ற உரையாசிரியர்களைப் போலவே குறித்துள்ளனர் (Puravaleru Arimathi Thennagan, 1997)."

1927 ஆம் ஆண்டு முதல் திருக்குறளைத் தமிழகம் எங்கும் பரப்பத் தொடங்கினர். இவர்களின் பகுத்தறிவுப் பார்வை திருக்குறளுக்குப் பலர் புத்துரைகள் தோன்றக் காரணமாக அமைந்தது. "திராவிட இயக்கத்தின் கடவுள் மறுப்பு, முடநம்பிக்கை, மறுபிறவி மறுப்பு என்பன போன்ற கொள்கைகளைக் கொண்டவர்கள் எழுதிய உரைகள் பகுத்தறிவுப் பார்வை உரைகள் ஆகும் (Thirunavukkarasu,1995)."

கடவுள் மறுப்பு முதலான கருத்துக்களில் ஒருவிதப் பொதுத்தன்மை திராவிட இயக்கத்தாரின் உரைகளில் காணமுடிகிறது. பெரியார் ஏற்றிவைத்த திராவிட இயக்கம் என்னும் விளக்கினைக் கொண்டு திருக்குறள் மாபெரும் கடலின் ஆழ அகலங்கள் என்று அழைக்கப்படுகின்றது.

## திருக்குறள் உரைகள்

பரிமேலழகர் உரைக்கு முரணான உரைகளாகத் திராவிட இயக்க உரைகள் இயற்றப்பட்டுள்ளன. அரிமதி தென்னகன், திராவிட இயக்கச் சார்புள்ளவர்கள், உணர்வினை எண்மர் உரை எழுதியிருப்பதாக

குறிப்பிடுகிறார். "திராவிட இயக்க உணர்வுகள் பகுத்தறிவு நோக்கியதாக உரை எழுதியோர் எண்மர்" என்கிறார், எண்மர் உரைகளைப் பற்றியும் குறிப்புகளையும் தருகிறார் (Puravaleru Arimathi Thennagan, 1997).

தற்போதைய நிலையில் பார்க்கின்ற போது "30 க்கும் மேற்பட்ட திராவிட இயக்க அல்லது திராவிட இயக்கம் சார்பிலான உரைகள் வெளிவந்து இருப்பதாக குறிப்புகள் இருக்கின்றன என்கிறார்" (Kuppusamy, 2019).

எளிமையாக இருக்கும் உரைகள் மட்டுமே முதன்மையானதாகப் பலராலும் பார்க்கப்படுகின்றது. அவற்றுள்,

- ❖ வள்ளுவர் உள்ளம் - பாவேந்தர்.
- ❖ குழந்தையுரை-புலவர் குழந்தை.
- ❖ திருக்குறள் மணிவிளக்க உரை- க.அப்பாதுரையார் .
- ❖ திருக்குறள் உண்மைப் பொருள்-கு.ச.ஆனந்தன்.
- ❖ திருக்குறள் எளிய தெளிவுரை - கு.இலக்குவணர்.
- ❖ நாவலர் தெளிவுரை - நாவலர் நெடுஞ்செழியன்.
- ❖ கலைஞர் உரை - கலைஞர் மு. கருணாநிதி.
- ❖ மனிதநேய உரை -அரிமதி தென்னகன் என்று ஒரு பட்டியலையும் தருகிறார்.
- ❖ அர்த்தனாரி-மா. - திருவள்ளுவரின் பொருள்.
- ❖ இறையரசன், - குறளும்,பொருளும்.
- ❖ கடலூர் மணிமாறன் - திருக்குறள் எளிய தெளிவுரை.
- ❖ கோவிந்தராசன் பே.சு. - உலகப்பொதுமறை திருக்குறள்.
- ❖ செல்லையா - உரை.
- ❖ புலவர் குழந்தை - திருக்குறள் ஒரு பகுத்தறிவுப் பார்வை.
- ❖ மல்லை மணிவாசகம் - திருக்குறள் பகுத்தறிவு.

இவ்வுரைகள் குறிப்பிடத்தக்கன. வள்ளுவர் குறள் பொதுமையானது. எனவே அதில் சமயமும் பகுத்தறிவுக் கருத்துக்களும் இருக்கும். சமயம் சார்ந்து வரும் குறள்களுக்கு திராவிட இயக்கத்தார் கூறும் உரைகளும் பகுத்தறிவுக் கருத்துக்களுக்கு பரிமேலழகர் கூறும் கருத்துக்களும் இதில் ஆராயப்பட்டுள்ளன. குறிப்பாக பரிமேலழகர் உரையோடு தந்தை பெரியார், புலவர் குழந்தை, பாரதிதாசன், கலைஞர் ஆகிய இவர்களின் உரைகள் குறித்து வெளிப்படுத்துவதில் இவ் ஆய்வு முதன்மைப் பெறுகிறது.

## திருக்குறளும் திராவிட உரையாசிரியர்களின் பார்வையும்

### பரிமேலழகர்

பன்முக அறிவாற்றல் பெற்ற இவர் திருக்குறள் உரையாசிரியர்களில் சிறந்தவர். குறளை ஒவ்வொரு உரையாசிரியர்களும் ஒவ்வொரு விதமாக அடுக்குகின்றனர். பரிமேலழகர் திருக்குறளின் உள்ளக் கருத்தை ஆழ அகழ்ந்து கண்டு உரை நலம் கூறுவது இவருக்கான தனிச்சிறப்பு ஆகும். இவர் அரசியல், பொருளியல், தருக்க இயல், மருத்துவ இயல், உளவியல், உழவியல், இசை எல்லாவற்றிற்கும் சாட்சியாக அமையும் விதமாக உரை வகுத்துள்ளார். பரிமேலழகர் திருக்குறள் முழுவதையும் வடமொழி வேதத்தின் பிரதியாகவே அணுகினார்.

மேலும், வரணாசிரம முறைகளைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்துள்ளார். வடநூல் கருத்துக்களையே வள்ளுவர் கூறினார் என்பது இவரது கருத்து. இதனால் பரிமேலழகர் உரை வள்ளுவர் உள்ளத்தை உண்மையாக வெளிப்படுத்தவில்லை என்பது பலரது எண்ணம். பரிமேலழகர் உரைப்பற்றி தேவநேயப் பாவாணர் குறிப்பிடும் போது, "வள்ளுவத்தின் அடி வேரினை விளக்கம் என்ற வாள் கொண்டு அறுத்து எறிந்தார் பரிமேலழகர்" என்று குறிப்பிடுகின்றார்.

பரிமேலழகரின் உரையில் குறள் வளம், வடமொழிப் புலமை, அரசியல் புலமை, சமயப் புலமை, உளவியல் புலமை, இலக்கணப் புலமை கொண்டு அமைந்திருப்பது உரைக்கு பெருமையைத் தருகிறது. புலவர் குழந்தை குறிப்பிடும்போது பரிமேலழகரின் உரையில் வள்ளுவர் கருத்துக்கு மாறாக அயற் கொள்கைகள், வடனூற் கொள்கைகள் பரிமேலழகரால் பல வலிந்து புகுத்தப்பட்டுத் தமிழ்ப் பண்பாடு மறைக்கப்பட்டு உள்ளது என்று குறிப்பிடுகிறார். பரிமேலழகர் உரை பிற உரைகளுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்திருப்பதாலும் திராவிட இயக்க உரைகள் அனைத்தும் பரிமேலழகர் உரைக்கு எதிர்ப்பாகவே அமைந்திருப்பதாலும் அவரது உரை முதலாவதாக வைத்து திராவிட இயக்கத்தாரின் உரைகளோடு ஆராயப்பட்டுள்ளது.

## தந்தை பெரியார்

'திருக்குறளில் பெரியாருக்கு மிகுதியும் உடன்பாடு இல்லையாயினும் முழுவீச்சாக எதிர்க்கவில்லை காரணம் திருக்குறள் ஓர் அறிவு என்பதேயாகும்' வள்ளுவர் அறிவிற்கே முதன்மை அளித்தவர். பெரியார் சிறுவயது முதலே பகுத்தறிவுச் சிந்தனை உடையவர் என்பதை அவரது கூற்று வழி அறியலாம். "நல்ல செயல் எதையும் கடவுள் சினந்து கொள்வாரோ என்றோ தண்டிப்பாரே என்றோ கருதி எந்த ஒரு நல்ல செயலையும் செய்யாமல் விட்டிருக்க மாட்டேன் கடவுள் மகிழ்ச்சி அடைவார் என்று கருதி எனக்கு அவசியம் என்று தோன்றாத எந்தச் செயலையும் செய்திருக்க மாட்டேன் " என்று குறிப்பிடுகின்றார் (Kuppusamy, 2019). பெரியார் தமது மேடைகளில் வள்ளுவம் குறித்துப் பேசும்போது பல புதிய விளக்கங்களைத் தருகிறார். தமிழகத்தில் திருக்குறளுக்கு மாநாடு நடத்தியவர் அறிவு ஆசான் தந்தைப் பெரியார். கடவுள் வாழ்த்துக்கு அறிவுப்பூர்வமான உரை எழுதியவரும் தந்தைப் பெரியாரே. கடவுள் வாழ்த்து அதிகாரத்தைப் பண்புச் சிறப்பு என்று மாற்றியமைத்ததோடு நில்லாமல், "ஒரு மனிதனுக்கு என்னென்ன குண நலன்கள் இருக்க வேண்டுமோ, அந்த குணங்கள் கொண்ட பண்புடையவனை அவர் அதன் மூலம் குறிக்கிறார் (Thanthai Periyar, 2001)."

கடவுள் வாழ்த்து அதிகாரம் முழுமைக்கும் இவர் புதிய நோக்கில் உரை தருகிறார். முதற் குறட்பாவில் வரும் சொற்களான 'ஆதி', 'பகவன்', 'உலகு' (குறள் எண்-1) ஆகிய சொற்களை வடமொழிச் சொற்களாக இவர் கருதுகிறார். மேலும் ,"வாலறிவன், மலர்மிசை ஏகினான், மாணடி சேர்ந்தார்,(குறள்3), 'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்'(குறள்5) என்பனவெல்லாம் பண்புகளை குணநலன்களைக் காட்டுவதாகும்" என்பதும் பெரியாரின் கருத்தாகும். (Thanthai Periyar, 2001)

வாலறிவன்' - தூய்மையான அறிவை உடையவன், உண்மை அறிவினை உடையவன். அறிவில் மூத்தவர். 'மலர்மிசை ஏகினான்' - மக்களின் நெஞ்சமாகிய மலர்மீது பொருந்தி வாழக்கூடியவன், 'வேண்டுதல் வேண்டாமை இலான்' - விருப்பும் வெறுப்பும் அற்ற சான்றோர். போன்ற விளக்கங்களைத் தருகிறார்.

'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்' (குறள்1062) என்னும் குறளை விளக்கும் போது பொதுவுடைமைக் கருத்துப் பொதிந்தக் குறளாக வள்ளுவர் படைத்திருப்பதாக எண்ணுகிறார். "ஒருவன் பிச்சை எடுத்துதான் வாழ வேண்டிய நிலையிருப்பின் அவனைப் படைத்ததாகக் கூறப்படும் படைத்தவனை ஒழி' 'என்று புரட்சி விதையைத் தூவும் கருத்தாக அமைத்திருக்கிறார் என்று நினைக்கிறார் பெரியார். பெரியார் வள்ளுவம் முழுமைக்கும் உரை எழுதவில்லை என்றாலும் சில குறட்பாக்களுக்கு திராவிட இயக்கச் சிந்தனையோடு பொருளமைதி கண்டுள்ளமை எண்ணற்குரியது.

## புலவர் குழந்தை!

திராவிட இயக்கச் சிந்தனையில் வெளிவந்த முதல் திருக்குறள் உரை நூல் புலவர் குழந்தை எழுதிய திருக்குறள் உரையாகும். இவர் திருக்குறள் மீது அளவு கடந்த பற்று கொண்டவர். தந்தை பெரியார் மீது அளவுகடந்த பக்தியும் மரியாதையும் கொண்டவர், 1948 ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் கலந்து கொண்டார். இவர் ஆற்றிய உரை அனைவரையும் கவர்ந்தது. குறள் மாநாட்டில் புலவர் குழந்தையிடம் பெரியார் குறளுக்கு புத்துரை இயற்ற வேண்டும்

எனக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பெரியார் கட்டளையை சிரமேற்கொண்டு இருபத்தைந்தே நாட்களில் திருக்குறள் முழுமைக்கும் உரை எழுதினார். இந்த உரை உடனே திருக்குறள் குழந்தையுரை என்ற நூலாக வெளியிடப்பட்டது. திராவிட இயக்கத் திருக்குறள் உரை நூல்களுக்கெல்லாம் முன்னோடியாக இவர் நூல் போற்றப்பட்டது.

இதேபோல் திருக்குறள் மாநாடுகள் பலவற்றில் கலந்து கொண்டு உரை இயற்றி உள்ளார். இவர் தனது பதிப்பகத்திற்கு வைத்த பெயர் "வள்ளுவர் பதிப்பகம்" என்பதாகும். முப்பாலின் இறுதிப் பகுதியான 'காமத்துப்பால்' என்பதனை 'இன்பத்துப்பால் 'என மாற்றம் செய்துள்ளார். 'பாயிரம்' என்பதனை 'முதலியல்' என்று அழைக்கிறார், தெய்வம் என்பதற்கு 'மேலானவர்' என்று பொருள் தருகிறார். இவரின் திராவிட இயக்க சிந்தனையோடு இருக்கக்கூடிய உரையையே மற்ற திராவிட இயக்க சிந்தனையுடைய உரையாசிரியர்களும் பின்பற்றுகின்றனர். சமயச் சார்பான உரைகளுக்கு பரிமேலழகர் உரை முன்னோடியாக அமைந்தது போல பகுத்தறிவுச் சார்பான உரைகளுக்கு புலவர் குழந்தை உரை முன்னோடியாக அமைகின்றது.

## பாரதிதாசன்

பேரறிவாளன் வள்ளுவனின் உள்ளத்தை அறிந்து உலகியல் நடைமுறைக்கு ஏற்பவும் பகுத்தறிவுக்கு ஒத்த வகையிலும் உண்மை நெறியுடனும் பெரியார் வழி வந்தவர் என்ற பெருமைக்குரியவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன. திருக்குறள் முழுமைக்கும் இவர் உரை எழுதி இருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். எனினும் முழு உரை இதுவரை வெளிவரவில்லை. குயில் இதழில் 'வள்ளுவர் உள்ளம்' எனும் தலைப்பில் உரை எழுதிய பகுதிகளைத் தொகுத்துள்ளார். மொத்தமாக 85 குறட்பாக்களுக்குப் பாரதிதாசன் உரை கிடைக்கிறது. திருக்குறளுக்கு 'வள்ளுவர் 'உள்ளம்' என்ற உரை விளக்கத்தை 01.11.1959-ல் எழுதினார். கற்பவை கற்கும்படி வள்ளுவர் சொன்னபடி கற்கத்தான் வேண்டும் அப்படி கல்லாதவர் வாழ்வது எப்படி என்று வினா தொகுத்தார் பாவேந்தர்.

'மதமிலார் நூற்கு மதமுனார் உரைசெயின்

அமைவதாகுமோ? ஆய்தல் வேண்டும்'

என்பார் பாவேந்தர். மதக் கருத்துக்கள் நீக்கி திருக்குறளுக்கு உரை வரைய பாவேந்தர் திட்டமிட்டுக் குயில் ஏட்டில் 8.12.1959 முதல் 07.02.1961 வரை குயில் இதழில் உரை வரைந்தார். பாரதிதாசன் ஆத்திக நாத்திக நோக்கில் செல்லாமல், சமயம் சாதி நோக்கிலும் செல்லாமல் பொதுவான நிலையில் இருந்து உரைக்கான முயன்றுள்ளார். திருக்குறள் கருத்தரங்குகள், சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார் . பல திருமணங்களில் உரையாற்றும் பொழுது திருக்குறள் கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளார். "வள்ளுவர் உள்ளம் நாத்திகமும் இல்லை, ஆத்திகமும் இல்லை. அவர் நெறி உண்மை நெறி வையத்தில் வாழ்வாங்கு வாழும் நெறி" எனக் குறிப்பிட்டுள்ளார். (Munusamy, 1948)

'வானோர்க்கும்' என்னும் சொல்லை வான் 'ஓர்க்கும் மேல்நோக்கி மழை வரவை ஆராயும்' என்று பதம் பிரித்துப் பொருள் பார்க்கும் புதுமையை இவருரையில் மட்டுமே காணமுடிகிறது. "அறத்தாறு இதுவென வேண்டா" எனும் குறட்பாவின் கருத்தாக' செய்யும் தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை என்கிறார். இதுவே வள்ளுவர் உள்ளமும் ஆகும்' என்று வலியுறுத்தவும் செய்கிறார். பாரதிதாசன் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் முன்னுரை எழுதியுள்ளார். ஒவ்வொரு திருக்குறளுக்கும், பொருள், கருத்து, இலக்கண குறிப்பு, மேற்கோள் விளக்கங்கள் போன்றவற்றைத் தெளிவாகக் கொடுத்துள்ளார். இறுதியாக ஆத்திக நாத்திக வினாக்களும் உரையாசிரியரின் விடையும் உரையாடல் அமைப்பில் அமைந்துள்ளன.

## நாவலர் நெடுஞ்செழியன்

புலவர் குழந்தைக்குப் பிறகு திராவிட இயக்கக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட உரையில் 'திருக்குறள் தெளிவுரை ' என்ற உரை நூல் குறிப்பிடத் தக்கதாகும். 1992 ம்

ஆண்டு திருக்குறள் தெளிவுரை எனும் பேருரையும் 2000 ம் ஆண்டு கையடக்கப் பதிப்பாகத் 'திருக்குறள் நாவலர் உரை 'என்ற ஒன்றையும் வெளியிட்டுள்ளார். வள்ளுவத்திற்கு எதிரான கருத்துகள் பரிமேலழகர் உரையில் திணிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் கலங்கத்தை நீக்கிவிட்டு அதன் உண்மைப் பொருளை விளக்குவதே தன் முக்கிய நோக்கம் என்று முன்னுரையில் குறிப்பிடுகின்றார். புலவர் குழந்தை, கு.ச.ஆனந்தன் போன்றோர் இயல் பிரிப்பு, அதிகாரமுறை வைப்பு, போன்றவற்றை மாற்றம் செய்து உரை வகுத்தனர். ஆனால் இவரோ பரிமேலழகர் செய்து தந்துள்ள வடிவமைப்பு முறையை ஏற்றுக் கொண்டு உரை செய்துள்ளார்.

"பரிமேலழகர் உரை வளம் முழுவதும் அப்படியே ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை என்றாலும் அவர் தந்த திருக்குறள் வடிவமைப்பு என்ற முறையில் அதனை மட்டும் ஏற்றுக் கொண்டு ஒவ்வொரு குறளைப் பொறுத்தும் உண்மையான, தெளிவான, திட்பமான, பொருளுரையைக் கண்டறிவது தான் சாலச் சிறந்ததாக இருக்கின்றது" என்று இவர் உரை செய்யும் முறைக்கு விளக்கம் தருகிறார். (Nedunchezhiyan, 2000)

'பகவன் அறிவன் என்பது இவர் தரும் பொருளாகும். 'தெய்வத்தோடு ஒப்பக் கொளல்(குறள்702)' எனும் தொடர்க்குப் போற்றத்தக்க மேன்மையானவருக்கு ஈடாக வைத்து மதிக்க வேண்டும்' என்கிறார்.

இவர் திராவிட இயக்கச் சிந்தனையாளர்கள் உரையிலிருந்தும் சிறிதுமாறுபட்டு உரைகாண்கிறார். சான்றாக, 'என்குணத்தான்' என்பதற்கு திராவிட இயக்கச் சிந்தனையாளர்கள் எண்ணத்தக்க குணம் உடையவன் என்று பொருள் உரைக்கின்றார். இவர் எண்ணிலடங்கா குணம் உடையவன் என்று புது பொருள் கூறுகின்றார். மற்ற இடங்களிலும் பகுத்தறிவுக் கொள்கைக்கு ஊறு நேராதபடியாகவே இவர் உரை அமைந்துள்ளது.

## டாக்டர் கலைஞர்

பகுத்தறிவுக் கொள்கையும், கலையுள்ளமும் கொண்ட கலைஞர் ‘குறளோவியம்’ கண்டவர், திருக்குறளுக்கு உரையும் வரைந்துள்ளார். திருவள்ளுவரின் கருத்துக்களுக்கு ஒட்டியும் உறழ்ந்தும் கலைஞர் உரை உள்ளது. முரசொலியில் எழுதிய உரைகளின் தொகுப்பே 1996 ம் ஆண்டு "திருக்குறள் கலைஞர் உரை" என வெளிவந்துள்ளது. அதிகாரத்தலைப்பு மாற்றம் கலைஞர் உரையில் உள்ளது. அதுபோல் வழக்கமான திராவிட இயக்க உணர்வாளர்கள் மாறுபடும் சில இடங்களில் புதிய முறையில் உரைகாண முயன்றுள்ளார். 'கடவுள் வாழ்த்தை' வழிபாடு’ எனத் தலைப்பாக்குகிறார்.

'வாலறிவன் 'என்பதற்கு மூத்தப் பெருந்தகையாளன், எனவும், ’மலர்மிசை ஏகினான்'(குறள்3) மலர் போன்ற மனத்தில் நிறைந்தவன் இறைவன் எனவும் 'அந்தணர் 'என்பதற்கு 'சான்றோர் 'எனவும், 'தென்புலத்தார்' என்பதற்கு 'வாழ்ந்து மறைந்தோர் 'எனவும் 'புத்தேளிர்' என்பதற்கு புதிய உலகம் எனவும், ‘எழுபிறப்பு’ என்பதற்கு ஏழேழு தலைமுறை எனவும் குறிப்பிடுகின்றார். கலைஞர் உரை வரையும் பொழுது எமன், தெய்வம் குறித்த நம்பிக்கைகளை மனத்தில் கொண்டே உரை வரைந்துள்ளார். பெரியார், அண்ணா, பாரதிதாசன் ஆகியோர் வழியில் வாழ்வை நடத்திய இவர் பகுத்தறிவு நோக்கில் உரை வகுத்துள்ளதாகக் கொள்ளலாம். வள்ளுவரை ஒரு பகுத்தறிவுவாதியாய்க் காட்ட முழு அளவில் இவர் முயலவில்லை என்றும் சொல்லலாம்.

"வள்ளுவரைக் கடவுள் மறுப்பாளர் அல்லது கடவுள் நம்பிக்கையாளர் எனும் வாதத்திற்குள் சிக்க வைக்க நான் விரும்பவில்லை" என்று கூறுவதன் மூலமும், "நான் எண்ணுவது போல் அவர் எண்ணினாரா என்று நோக்காமல் அவர் எண்ணி எழுதியது என்ன என்பதை அறிவதில் மட்டுமே அக்கறை கொண்டு என் அறிவுக்கும் ஆற்றலுக்கும் எட்டிய வரையில் இந்தப் பொன்னாடையை நெய்துள்ளேன் " என்று சொல்வதாலும் திராவிட இயக்கப் பார்வை நூல் முழுவதும் பரவியிருக்கிறது என்று அவரும் ஒப்புக் கொள்ளவில்லை எனத் தெரிகிறது (Karunanidhi, 1997).

அறம், பொருள், இன்பம் எனும் முறையிலேயே திருக்குறளை இவரும் அணுகியுள்ளார். நல்லப் பண்புகளை உடையவன் எவரோ 'அவர் அடியொட்டி வாழ்வதே வழிபாடு 'என்று பொருள் கொள்கிறார் இவர். காமத்துப்பாலுக்கு உரை வரையும் பொழுது கற்பனைத் ததும்பும் பல இடங்களைக்

காணமுடிகிறது. கவித்துவம் நிறைந்த நடையில் உரை செய்திருப்பதால் படிப்பதற்கு சுவையாக இருப்பது இவருரையின் தனிச் சிறப்பு. வான்சிறப்பு அதிகாரம் மழையின் சிறப்பைப் புலப்படுத்தினாலும் இவர் சமுதாயத்துடன் இணைத்துப் பார்க்கும்முறை புத்துரையாக இருக்கிறது. "ஒருவன் மனத்தில் உள்ளதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளக்கூடிய சக்தி தெய்வத்திற்கு உண்டு என்று கூறினால், அந்தத் திறமைப் படைத்த மனிதனையும் அத்தெய்வத்தோடு ஒப்பிடலாம்" என்கிறார் கலைஞர்.

கலைஞர் உரை பொழிப்புரையாக இருப்பினும் எளிய மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவான நடையில் இருப்பது போற்றுதற்குரியது. கலைஞர் உரை எவர் உரையையும் தழுவிடவில்லை உரிய இடங்களில் உரிய கருத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார். அவர் நோக்கம் முழுவதும் சாமானியன் படித்தால் கூடக் குறள் புரிய வேண்டும் என்பதே. அந்த நோக்கில் கலைஞர் வெற்றி வாகை சூடியுள்ளார்.

## முடிவுரை

குறளுக்கு உரை எழுதுவோர் இவர் உரையைப் படிக்காமல் எழுத முடியாது என்ற அளவிற்குத் திருவள்ளுவரோடு நெருங்கி இருப்பவர் பரிமேலழகர். புலவர் குழந்தையே முதன்முதலில் திராவிட இயக்க நோக்கில் உரை செய்தார். திராவிட இயக்கத்தினரின் திருக்குறள் உரைக்குப்பின் பரிமேலழகரின் உரை அதிக அளவில் விமர்சிக்கப்பட்டு, வைப்பு முறையிலிருந்து மாறி அமைந்துள்ளன. திருக்குறளால் திராவிட இயக்கமும், திராவிட இயக்கத்தால் திருக்குறளும் சிறப்புற்றன. குறளை முழுமையாகப் பெரியார் ஏற்றுக்கொள்ளவில்லை. அவரவருக்குத் தேவையானதை எடுத்துக்கொள்ளுமாறு குறிப்பிடுகின்றார். திருக்குறளைக் காட்சிவழிப் பரப்பியதில் கலைஞர் முதன்மையான இடத்தைப் பெறுகிறார். கலைஞருக்குக் கலைகள் மீது ஆர்வம் இருப்பதால் திருக்குறளைக் கலைகள் வழி பரப்ப முயன்றுள்ளார் அதில் வெற்றியும் கண்டுள்ளார்.

## References

Kamalakkannan, P., (2016) Bhaktiyum Paguththarivum, Kaavya Pathippagam, Chennai, India.

Karunanidhi, M., (1997) Thirukkural-Kalaignar Urai, Thirumagal Nilaiyam, Chennai, India.

Kuppusamy, P., (2019) Thirukuralum Dravida Iyakamum, Bharathi Puthakalayam, Chennai, India.

Munusamy, V., (1988) Thirukkuralar, Thirukkural adhikaara vilakkam, Vanathi Pathippagam, Chennai, India.

Nedunchezhiyan, Raa., (2000) Thirukkural Naavalar Urai, Navalar Nedunchezhiyan Kalvi Arakkattalai, Chennai, India.

Puravaleru Arimathi Thennagan, Thirukkural Kalaignar Urai, illaku Nilaiyam, Chennai, India.

Thanthai Periyar, (2001) Thirukuralum Periyarum, Periyar Suyamariyathai Pirachara Niruvanam, Chennai, India.

Thirunavukkarasu, K., (1995) Thirukuralum Dravida Iyakamum, Nakkeeran Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License